www.Padasalai.Net www.CBSEtips.in

# முதல் பருவத்தேர்வு – 2023

## தொகுத்தறி மதிப்பீடு - அறிவியல்

**வகுப்பு – 7** **மதிப்பெண்கள் : 60**

**கால அளவு : 2 மணி நேரம்**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **8×1=8**

1. பின்வருவனவற்றுள் எது வழி அளவு?

அ) நிறை ஆ) காலம் இ) நீளம் ஈ) பரப்பு

2. அறை வெப்பநிலையில் திரவமாக உள்ள உலோகம் ________.

அ) குளோரின் ஆ) சல்ஃபர் இ) பாதரசம் ஈ) வெள்ளி

3. ஒரு பொருளின் சமநிலையை நாம் எவ்வாறு அதிகரிக்கலாம்?

அ) ஈர்ப்புமையத்தின் உயரத்தைக் குறைத்தல்

ஆ) ஈர்ப்புமையத்தின் உயரத்தை அதிகரித்தல்.

இ) பொருளின் உயரத்தினை அதிகரித்தல்.

ஈ) பொருளின் அடிப்பரப்பின் அகலத்தினைக் குறைத்தல்.

4. அணுக்கருவைச் சுற்றிவரும் அடிப்படைத்துகள் ________.

அ) அணு ஆ) நியூட்ரான் இ) எலக்ட்ரான் ஈ) புரோட்டான்

5. மலரின் பெண் இனப்பெருக்க உறுப்பு ________.

அ) சூலகவட்டம் ஆ) புல்லிவட்டம் இ) மகரந்தத்தாள் வட்டம் ஈ)அல்லிவட்டம்

6. முதலுதவி என்பதன் நோக்கம் ________.

அ) பணத்தைச் சேமித்தல் ஆ) வடுக்களை தடுத்தல்

இ) மருத்துவப் பராமரிப்பைத் தடுத்தல் ஈ) வலி நிவாரணம்

7. உறிஞ்சு வேர்களுக்கு எடுத்துக்காட்டு ________.

அ) வாண்டா ஆ) கஸ்குட்டா இ) அவிசினியா ஈ) கரும்பு

8. போட்டோஷாப் மென்பொருளை அதிகம் பயன்படுத்துபவர்கள் யார்?

அ) ஆசிரியர்கள் ஆ) மருத்துவர்கள்

இ) வண்ணம் அடிப்பவர்கள் ஈ) புகைப்படக் கலைஞர்கள்

**II கோடிட்ட இடத்தை நிரப்புக.** **5×1= 5**

9. சுவாச வேர்கள் ________ தாவரத்தில் காணப்படுகின்றன.

10. ________ மின்சாரத்தைக் கடத்தும் ஒரே அலோகம்.

11. ________ என்பவை அணுக்கருவினுள் அமைந்துள்ள நேர்மின்னூட்டம் பெற்ற துகள்கள் ஆகும்.

12. இதுவரை அறியப்பட்ட தனிமங்களின் எண்ணிக்கை ________.

13. ________ என்பது அசைவூட்டம் என்பதற்கு உதாரணம்.

**III. சரியா? தவறா? தவறு எனில் சரியான கூற்றினை கூறவும்.** **5×1=5**

14. இஞ்சி என்பது தரைகீழ் வேராகும்.

15. அனைத்து உணவுகளும் மூடப்பட்டிருக்க வேண்டும்.

16. இரும்பு குண்டு பாதரசத்தில் மிதக்கும்.

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

17. ஆர்கான் வாயு, ஓரணு வாயுவாகும்.

18. எலக்ட்ரான்கள் நேர்மின்சுமை கொண்டவை.

## IV. பொருத்துக. 5×1=5

| | | |
|---|---|---|
| 19. | நிறை | படப்புள்ளிகள் |
| 20. | மின்சுமையற்ற துகள் | சால்மோனெல்லா |
| 21. | ராஸ்டர் | சப்பாத்திக்கள்ளி |
| 22. | டைபாய்டு | நியூட்ரான் |
| 23. | இலைத்தொழில் தண்டு | கிகி |

## V. ஒப்புமை தருக. 3×1=3

24. திரவம்: லிட்டர் :: திடப்பொருள்: _________.

25. ஆக்ஸிஜன்: O :: பாஸ்பரஸ்: _________.

26. காசநோய்: காற்று :: காலரா: _________.

## VI. ஏதேனும் 7 வினாக்களுக்கு மட்டும் விடையளி. 7×2=14

27. வழி அளவுகள் என்றால் என்ன?

28. ஈர்ப்பு மையம் - வரையறு.

29. மூலக்கூறு – வரையறு.

30. உனது தலைமுடி சுத்தமாகவும் சுகாதாரமாகவும் இருக்க என்ன செய்வாய்?

31. கீழ்க்காணும் தனிமங்களின் வேதியியல் குறியீட்டை எழுதுக.

அ) ஹைட்ரஜன் ஆ) நைட்ரஜன் இ) ஓசோன் ஈ) சல்ஃபர்

32. ஐசோடோப்புகள் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.

33. அயல் மகரந்தச்சேர்க்கை என்றால் என்ன?

34. மழைக்காலங்களில் உங்கள் பகுதியில் பரவும் இரண்டு தொற்று நோய்களின் பெயர்களை எழுதுக.

35. தாவரங்களில் காணப்படும் இரண்டு வகையான இனப்பெருக்க முறைகளை எழுதுக.

## VII. ஏதேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விரிவான விடையளி. 4×5=20

36. ஒழுங்கற்ற வடிவமுள்ள பொருளொன்றின் கன அளவை எவ்வாறு அளவிடலாம் என்பதை சோதனை மூலம் விவரி.

37. முடுக்கம் என்றால் என்ன? அதன் வகைகளை விவரி.

38. உலோகங்களுக்கும் அலோகங்களுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை அட்டவணைப்படுத்துக.

39. அணு அமைப்பினை படம் வரைந்து அதன் அடிப்படைத்துகள்களின் நிலையினை விளக்குக.

40. மகரந்தச்சேர்க்கைப் பற்றி விவரி.

41. மலரின் நீள்வெட்டு தோற்றத்தை வரைந்து, கீழ்க்காணும் பாகங்களைக் குறி.

(பூக்காம்பு, மகரந்தப்பை, மகரந்தக்கம்பி, அல்லி இதழ், புல்லி இதழ், சூற்பை, சூலக தண்டு, சூலக முடி.)

Kindly send me your study materials to padasalai.net@gmail.com